# DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் புதன்கிழமை 20ம் நாள் சாட்சியாகிய நீபா என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நீபா | வயது | 44 |
| க/பெ. | ரமேஷ் | இனம் | பெண் |
| கிராமம் | அரக்கோணம் | தொழில் | சொந்த தொழில் |
| சமயம் | | தாலூக்கா | |

**C.C.207/2019**

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்இல்லை. எதிரி சார்பாக குவிமுச பிரிவு 317ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளத. எதிரி வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்.)

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி 20.08.2025 பு.சா.1</u>**

1. நான் அரக்கோணத்தில் வசித்து வருகிறேன். எதிரி என்னிடம் காசோலையை வீட்டில் வைத்து கொடுத்ததாக சொன்ன விவரத்தை புகாரிலோ அல்லது முதன்மை சாட்சியத்திலோ கூறியுள்ளேனா என்றால் இல்லை. எதிரியின் கணவர் பெயர் எனக்கு தெரியுமா என்றால் குமரவடிவேல் என்கிற ரவி. நான் என்னுடைய புகார் மனுவில் எதிரியின் கணவர் பெயரை என்னவென்று குறிப்பிட்டு இருக்கிறேன் என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை.

2. எனக்கு எதிரியின் கணவர் பெயர் ஞாபகமில்லை என்று சொல்வது பொய் என்றாலும், எதிரியின் கணவர் பெயர் எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. என்னுடைய புகாரில் எதிரியின் கணவர் பெயர் குமரவடிவேலு என்று குறிப்பிட்டுள்ளேன் என்றாலும், முதன்மை சாட்சியத்தில் ரவி என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய வழக்கறிஞர்தான் நான் சொன்ன விவரங்களை வைத்து புகார் மற்றும் முதன்மை சாட்சியத்தை தயார் செய்து கொடுத்தார்.

3. எதிரினுடைய காசோலையை நான் பார்த்துள்ளேன் என்றால் ஆம். வழக்கின் காசோலையில் காலவரையறை மூன்று மாதம் அல்லது ஆறு மாதம் என்று ஏதேனும் குறிப்பிடப்பட்டு இருந்ததா என்றால் அதை நான் கவனிக்கவில்லை. 01.04.2012 ம் தேதிக்கு முன் உள்ள காசோலைகளில் காலவரையறை எதுவும் குறிப்பிட்டு இருக்காது என்றாலும், அதன் பிறகு உள்ள காசோலைகளில் காலவரையறை குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி என்னிடம் எந்த வருடத்தின் காசோலை கொடுத்தார் என்பது பற்றிய விவரம் எனக்கு தெரியாது.

4. எதிரி 03.06.2019 ம் தேதி அன்று காசோலை மற்றும் இதர ஆவணங்கள் தொலைந்ததாக அரக்கோணம் கிராமிய காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் விவரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எதிரி வழக்கறிஞர் அனுப்பிய பதில் அறிவிப்பில் மேற்படி விவரம் குறிப்பிடப்பட்டு இருக்கிறது என்றாலும், தற்போது வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி எதிரி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் சம்மந்தமாக (CSR) மனு ரசீது எண் 689/2019 பதிவு செய்தது பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5. மனு ரசீது மட்டும் இல்லாமல் எதிரியின் காசோலை தொலைந்ததால் அதை கண்டுபிடிக்க முடியவில்லை என சான்றளிக்கப்பட்ட ( Non Traceable certificate) விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் என்னுடைய புகார் மற்றும் முதன்மை சாட்சியத்தில் எதிரி வழக்கறிஞர் அனுப்பிய பதில் அறிவிப்பில் உள்ள விவரங்களை மறுத்து உள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி தொலைத்த காசோலையை எடுத்து நான் சட்டத்திற்கு விரோதமாக எதிரி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி எதிரி பதில் அறிவிப்பில் சொன்ன விவரங்கள் உண்மை என்பதால் நான் அதற்கு மறுப்பு எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல.

6. இவ்வழக்கின் உண்மையான குற்றவாளி நான் என்றாலும், எதிரி கொடுத்த பதில் அறிவிப்பிற்கு மறுப்பு எதுவும் தெரிவிக்காமல் எதிரி மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. என் மீது எதிரி நடவடிக்கை எடுக்க தயாராக இருக்கிறார் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** – இல்லை.

Taken down by me/before me

in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I(FAC)
Arakkonam.